# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 23/2021 நாள்: 22.09.2021

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

ஊரக உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் - 2021

சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப.(ஓய்வு) அவர்கள் தலைமையில் ஊரக உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் - 2021 தொடர்பாக 9 மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சியர்களுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுகள் குறித்து காணொளி காட்சி (Video Conferencing) வழியாக 22.09.2021 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி. எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ஆணைய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்காணொளி ஆய்வுக் கூட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நேர்மையாகவும், வெளிப்படைதன்மையுடனும் நடத்துவதற்கு கீழ்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

- மாவட்ட தலைமை அலுவலகங்களில் புகார் பிரிவு அமைத்தல்.
- தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதளத்தில் வேட்புமனு தாக்கல் முதல் தேர்தல் முடிவு அறிவித்தல் வரையிலான புள்ளிவிவரங்களை பதிவேற்றம் செய்தல்.
- வேட்புமனு தாக்கல் செய்யப்படாத இடங்கள் / ஒரு வேட்பு மனு மட்டும் பெறப்பட்ட விவரங்கள் மற்றும் உள்ளாட்சி பதவிகள் ஏலம் விடப்படுவதாக வரப்பெறும் புகார்கள் குறித்த நடவடிக்கை விவரங்கள்.
- கோவிட் - 19 பரவலைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.
- வாக்குப்பதிவு அலுவலர்கள் அனைவருக்கும் கோவிட் - 19 தடுப்பூசி செலுத்தப்படுவதை உறுதி செய்தல்.
- தேர்தல் நன்னடத்தை விதிகளை செயல்படுத்துதல்.
- பறக்கும் படைகள் அமைத்தல்.
- வாக்குப்பதிவு அலுவலர்கள் நியமனம் செய்தல்.
- தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- பதட்டமான மற்றும் பிரச்சினைக்குரிய வாக்குசாவடிகளை கண்டறிதல் மற்றும் காவல்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்தல்.

..2..

- வாக்கு எண்ணும் மையங்களை அமைத்தல்.
- வீடியோ ஒளிப்பதிவு செய்தல் மற்றும் தேர்தல் நுண்பார்வையாளர்களை நியமித்தல்.
- வாக்கு எண்ணுகை மையங்களில் சிசிடிவி கேமரா அமைத்தல்.
- வாக்கு எண்ணுகை மையங்களில் உள்ள பாதுகாப்பு அறையில் 24 x 7 சிசிடிவி கேமரா மூலம் கண்காணித்தல்.
- வாக்குச்சாவடி சீட்டு (Booth Slip) பதிவிறக்கம் செய்து அச்சடித்தல் மற்றும் விநியோகித்தல்.
- துணை வாக்காளர் பட்டியல் தயார் செய்தல் மற்றும் அச்சடித்தல்.
- வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்கு எண்ணுகை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- மண்டல அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மாதிரி பயண திட்டம்.
- தேர்தல் பார்வையாளர்களுக்கான மாவட்டங்களில் தேர்தல் பணியாற்ற உரிய ஏற்பாடுகள் செய்து தருதல்.

தேர்தல் நேர்மையாகவும் ஜனநாயக முறையிலும் நடைபெறுவதை உறுதிசெய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

22/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்